மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஆகையால் உறுப்பினர் திரு. பூபதி அவர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தைக் குறித்து மட்டும் துணைக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, உணவு இல்லாமல் மக்கள் இறந்த சரித்திரம் இருக்கிறது. ஆனால் சர்க்கரை இல்லாமல் மக்கள் இறந்த தாகச் சரித்திரம் இல்லை. நமது மாநிலம் உணவைப் பொறுத்த வரையில் பற்றுக்குறை மாநிலமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பற்றுக் குறை நிலையை மாற்றுகிற வகையில் இந்த கரும்பு உற்பத்தியைக் குறைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கரும்பு உற்பத்தியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்ற அந்தக் கேள்வி, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எழவில்லை. அது தனிப் பிரச்சினை. சர்க்கரை விநியோகத்திற்கும் கரும்புப் பயிருக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை. அதே மாதிரியாக, நெல், மற்ற உணவு தானியங்கள் உற்பத்திக்கும் கரும்பு பயிரிடுவதற்கு கொஞ்சமும் சம்பந்தம் இல்லை. நான் ஏற்கெனவே பதில் சொன்னேன், கரும்பு விளைச்சலினாலோ அல்லது வேறு காரியத்தினாலோ இதெல்லாம் ஏற்படவில்லை. வேண்டு மென்றே அரசியல் காரணத்திற்காக, திரித்துக் கூறுவதற்காக, "கரும்பு வேண்டாம், கரும்பு வேண்டாம்" என்று சொன்னார்கள் அதைக் குறித்துப் பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்தி விட்டார் கள். இரண்டு பக்கங்களிலும் இந்த விவாதம் இல்லாமல், அரிசி உற்பத்தி யையும் பெருக்கவேண்டும், சர்க்கரை உற்பத்தியையும் பெருக்கவேண்டும். கரும்பு நன்றாகப் பயிரிடப்பட வேண்டும். இந்த வகையில் நாம் திட்டமிடுவது தான் இந்த மாநிலத்தினுடைய நல்வாழ்வுக்கும் மேம் பாட்டுக்கும் பாடுபடுவதற்குரிய செயலாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது மணி 10-30-க்கு மேல் ஆகிவிட்டது. வினா-விடை நேரம் இத்துடன் முடிவடைகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. அறிவிப்புகள்.

(அ) தொழில்கள் வாரியத்திற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கை மீது விவாதத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு முன்னால் ஓர் அறிவிப்பு உள்ளது.

தொழில்கள் வாரியத்தின் (Board of Industries) தேர்தலுக்காக இருவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையை ஒத்திருப்பதால், அதாவது இரண்டாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். முருகையன், திரு. கோ. பூவராகன் ஆகிய இரு வேட்பாளர்களும் தொழில் வாரியத்துக்கு (Board of Industries) முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என்று நான் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

3. அரசினர் தீர்மானங்கள்.

(அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் (லீடர் ஆப் தி ஹவுஸ்) இந்தக் கோரிக்கைகளினுடைய வரிசையை மாற்றியமைப்பதைக் குறித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.